05.02.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 20/2019**

அ.சா.**9**

பெயர். **குப்புசாமி**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**ஊரில் நான் முக்கிய நபர் என்பதால் பஞ்சாயத்து தேர்தல் நடந்தால் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் நான் ஊரில் முக்கிய நபர் இல்லை. நான் ஊரில் எடைப்பாளையம் காலனியில் முக்கிய நபராக இருக்கிறேன் என்று காவல் துறை என்னை விசாரித்த போது வாக்குமூலம் அளிக்கவில்லை. வழக்கில் புகார் கொடுத்த சம்சுதீன் என்பவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான். அவர் அப்படி போட்டியிட்ட போது அவரை எதிர்த்து மோகனும், தேர்தலில் நின்றார் என்றால் சரிதான். மோகன் தலித் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், அவர் சம்சுதீனை எதிர்த்து போட்டியிட்டார் என்றால் சரிதான். எனக்கு மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும், அப்துல்ஜபார் சொல்லி தான் தெரியும். நேரடியாக தெரியாது என ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.**

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை**